# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## கல்ஹின்ன ஜாமிஅதுல் பத்தாஹ் அரபுக் கல்லூரி
## (கூட்டிணைத்தல்)

**கல்ஹின்ன ஜாமிஅதுல் பத்தாஹ் அரபுக் கல்லூரியைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ இம்ரான் மஹ்ரூப் அவர்களால் 2016, ஒற்றோபர் மாதம் 26 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2016, ஒற்றோபர் மாதம் 10 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

*[ 147 ஆம் சட்டமூலம் ]*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## கல்ஹின்ன ஜாமிஅதுல் பத்தாஹ் அரபுக் கல்லூரி
## (கூட்டிணைத்தல்)

## கல்ஹின்ன ஜாமிஅதுல் பத்தாஹ் அரபுக் கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

"கல்ஹின்ன ஜாமிஅதுல் பத்தாஹ் அரபுக் கல்லூரி" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான அரபுக் கல்லூரியொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட அரபுக் கல்லூரியுடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னால் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட அரபுக் கல்லூரி எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, கல்ஹின்ன ஜாமிஅதுல் பத்தாஹ் அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*கல்ஹின்ன ஜாமிஅதுல் பத்தாஹ் அரபுக் கல்லூரியைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "அரபுக் கல்லூரி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கல்ஹின்ன ஜாமிஅதுல் பத்தாஹ் அரபுக் கல்லூரியின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக, இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கல்ஹின்ன

ஜாமிஅதுல் பத்தாஹ் அரபுக் கல்லூரி" என்னும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம், அத்துடன் அது பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பி யாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) புனித குர்ஆனை மனனம் செய்து ஓதுவதற்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக வகுப்புக்களை நடாத்துதல் ;

(ஆ) அரபு மொழியில் இஸ்லாமிய சமயக் கல்வியைப் போதித்தல் ;

(இ) இஸ்லாமிய மதத்தைச் செயல் முறையில் அனுஷ்டிப்பதற்கு ஊக்குவித்தல் ;

(ஈ) முஸ்லிம்களும் ஏனைய மத நம்பிக்கையைப் பின்பற்றும் ஆட்களும் இஸ்லாம் குறித்து நன்கு விளங்கிக்கொள்ளும் நோக்கத்துடன் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நூல்கள், பருவ வெளியீடுகள், சஞ்சிகைகள் என்பவற்றை வெளியிடுவதுடன் சகல வசதிகளும் அடங்கிய நூல்நிலையம் ஒன்றை நிறுவுதல் ;

(உ) மாணவர்களுக்கு ஏனைய மொழிகளில் இஸ்லாமிய மதத்தைப் பரப்புவதற்கு இயலச் செய்ய அத்தகைய ஏனைய மொழிகளைக் கற்பித்தல் ;

(ஊ) இஸ்லாமிய சமுகத்தினரிடையே ஐக்கியத்தை வளர்த்தலும், மேம்படுத்தலும் மற்றும் அச்சமுகத்தினரின்

பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுதலும் அவசியம் எனக் கருதப்படும் பட்சத்தில் சன்மார்க்கத்தீர்ப்பு ''பத்வா'' வழங்குதலும் ;

(எ) தகைமையுடைய மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கி வெளிநாடு சென்று சன்மார்க்க உயர் கல்வி கற்பதற்காக உதவி உபகாரங்களைச் செய்தல் ; அத்துடன்

(ஏ) மேலேயுள்ள குறிக்கோள்களை எய்வதற்கு இடைநேர் விளைவான அல்லது உசிதமான அத்தகைய வேறு எல்லாக் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் விசுவாசக் கோட்பாடு.

**4**. எக்காலத்திலும் இவ் அரபுக் கல்லூரியில் கடமை புரியும் மதிப்பிற்குரிய அதிபரும் கௌரவ உஸ்தாத்மாரும் இதில் கற்கும் மாணவர்களும் இக்கூட்டுத்தாபனததிற்குத் தொண்டாற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை கௌரவ உறுப்பினர்களும் ஊழியர்களும் ''அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமாஅத்தை உடையவர்களாக இருந்து, ''அஷ்அரிய்யா'' கோட்பாட்டையும், ''ஷாபிஈ'' மத்ஹபையும் தூய ''தஸவ்வுப்'' நெறிமுறையையும் கடைப்பிடித்து பாதுகாத்து தப்லீக் ஜமாஅத்தின் புனித அழைப்புப் பணியை ஆதரித்து முடியுமானால் அப்பணியில் ஈடுபடுபவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம், கடப்பாடு, நிருவாகம் ஆகியன இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் அமைய, பதவிதாங்குநர்களையும், அவ்விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படக் கூடியவர்களுமான அத்தகைய வேறு ஆட்களையும் கொண்ட, நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபை ஒன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் ''சபை'' எனக் குறிப்பீடு செய்யப் படும்).

(2) அரபுக் கல்லூரியின் முதலாவது சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடனடியாக நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற மன்றத்தின் சபையாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.*

**6**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றின் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையானதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுல் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், மானியக் கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும் அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படும் ஏதேனும் கட்டிடத்தை அல்லது கட்டமைப்பை நிறுவுவதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**7**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு, உறுப்பினர்களைச் சேர்த்தல், மீளப்பெறுதல் அல்லது விலக்குதல், முகாமைச் சபையைத் தேர்ந்தெடுத்தல், கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்கள், முகவர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள் என்போரின் கடமைகளை நடாத்துதல், அலுவல்களைக் கொண்டுநடாத்துவதில் கூட்டுத்தாபனத்தினாலும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினாலும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள் அத்துடன் பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்தலும் அதன் குறிக்கோள்களை எய்தலும் என்பவற்றுக்காக இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுக ளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டபோது அதேபோன்ற ஒரு கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கொடை, விருப்பாவணம், நன்கொடை, அறுதி, சந்தாப்பணங்கள் அல்லது கட்டணங்கள் என்ற வகையில் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் தீர்மானிக்கவேண்டியவாறான ஒரு வங்கியிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளிலோ கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுகையில் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினை ஈடுசெய்வதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் ஆதனம் எந்த வகையிற் பெறப்பட்டாலும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், இலாபத்தின் பகுதியாகவோ மிகையூதியம் என்ற வகையாகவோ அல்லது வேறு எவ்வகையாகவோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலும் அல்லது கைமாற்றப்படுதலும் ஆகாது.

ஆயின், எவ்வாறாயினும் இப்பிரிவின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றை தடைசெய்தலாகாது :-

(அ) கூட்டுத்தாபனத்துக்கு ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகளுக்காகக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு நல்லெண்ணத்துடன் நியாயமானதும் தகுந்தளவுமான ஊதியத்தைக் கொடுப்பனவு செய்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால் அல்லது கூட்டுத்தாபன உறுப்பினரொருவர் பங்குதாரராகவுள்ள ஏதேனும் கம்பெனியாள் கூட்டுத்தாப

னத்துக்கு வாடகைக்கு விடப்பட்ட வளவுக்கு நியாய மானதும் தகுந்ததுமான வாடகையைக் கொடுப்பனவு செய்தல் ; அத்துடன்

(இ) தமது பணிகளை அல்லது கடமைகளை நிறைவேற்று வதில் அல்லது புரிவதில் அல்லது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதில் கூட்டுத்தாபனத் தின் உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளர் எவராலும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் முன் அங்கீகாரத்துடன் உறப்பட்ட நியாயமானதும் தகுந்தது மான செலவுகளைத் திருப்பிக் கொடுத்தல் அல்லது மீளக் கொடுப்பனவு செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.

**9**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர்; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்

தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

பெயர் மகுடத்தைப் பயன்படுத்துவதற்கான தகைமை.

**10.** (1) இக்கல்லூரியில் இருந்த 'அல் ஆலிமாக' வெளியாகும் ஒவ்வொரு மாணவரும், "பத்தாகி" என்னும் பெயர் மகுடத்தைப் பெறவும், பயன்படுத்தவும் அவரது பெயருக்குப் பின்னால் அதனை இடவும் உரித்துடையவராதல் வேண்டும்.

(2) மேற்சொல்லப்பட்டவாறு தவிர, ஆள் எவரும், எத்தகையதுமான எந்நோக்கத்துக்காகவேனும் அத்தகைய பெயர் மகுடத்தை பெறுதலோ, பயன்படுத்தலோ ஆகாது.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

**11.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, கூட்டுத்தாபனத்துக்கு அவரினாற் செலுத்தப்படற்பாலதான வருடாந்த ஒப்பப்பணத் தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவு தொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

கல்லூரியினால் செலுத்தப்படற்பாலனவும் கல்லூரிக்கு செலுத்தப் படவுள்ளதுமான கடன்கள்.

**12.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று கல்லூரிக்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்திகதியன்று கல்லூரிக்கு வருமதியாகவுள்ள கடன்கள், உதவுதொகைகள், ஒப்பப்பணங்கள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**13.** ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது இறுதிவிருப்பாவணக் கையளிப்பின்மீது அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை ஒன்றில் பயன்பெறும் சொந்தக்காராக அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளராக அல்லது வேறு வகையாக எடுக்கவும் வைத்திருக்கவும்

கூட்டுத்தாபனம் ஆற்றலுடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தின் அப் போதைக்கு வலுவிலுள்ள விதிளுக்கமையவும் அத்துடன் தொடர்புபட்ட கையாளுகைச் சாசனத்தின் ஏற்பாடுகளுக்கும், நிபந்தனைகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்கு கொடுக்க, கொடுத்து மாற்ற, வில்லங்கத்துக்குட் படுத்த அல்லது பொறுப்பிக்கவுள்ள முழுத்தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

**14.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது செயலாளரினது அல்லது சபையினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்டவாறாக சபை உறுப்பினர் ஒருவரினதும் பேரவையின் இன்னுமோர் உறுப்பினரதும் முன்னிலையிலன்றி, எத்தன்மையினதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்களது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடுவதிலிருந்து தனிவேறானதாதலும் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**15.** (1) சபை இடாப்பொன்றைப் பேணச் செய்வித்தல் வேண்டும். இச்சட்டம் தொடங்கும் தேதியன்று கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராகவிருக்கும் ஒவ்வோராளும் இதனகத்துப்பின்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரொருவராக அனுமதிக்கப்படும் ஒவ்வோராளும் அவரது பெயரை அத்தகைய இடாப்பில் பொறிக்கச் செய்வித்தல் வேண்டும். உறுப்பாண்மை.

(2) இடாப்பில் பின்வரும் விவரங்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு உறுப்பினரினதும் பெயர், முகவரி, வாழ்க்கைத் தொழில் ;

(ஆ) உறுப்பினரின் பெயர் இடாப்பில் பொறிக்கப்பட்ட தேதி; அத்துடன்

(இ) எவரேனும் ஆள் உறுப்பினராக இல்லாதொழிந்த தேதி.

**16**. கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாக் கடன்களும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக் கப்படுதலாகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டனவும், ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து விதிகளினால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப் பட்டனவுமான வேறு ஏதேனும் நிறுவகத்திற்கு அல்லது வேறு எவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவகம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படுகையில் அல்லது அதற்கு நேர்முந்திய நிலையில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்.*

**17**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமை களையேனும் அல்லது ஏதேனும் அரசியல் கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத் தில் குறிப்பிடப்படுகின்றவர்களும், அவர்கள் மூலம், அவர்களி லிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருகின்றவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசின் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**18**. ஆள் எவரும் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் சுமத்தப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளைக் கொண்டுநடாத்துகின்ற நோக்கத்திற்காக நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்படவேண்டு மென கருதப்படுகின்ற ஏதேனும் செயலுக்காக ஏதேனும் துடர்ச்சி யில் அல்லது வேறு ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் பொறுப் பாளியாக மாட்டார்.

*நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயல்களுக்கான நட்டோத்தரவாதம்.*

**19**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 :* (வெளிநாடு) *ரூபா 1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் *மாதம் 15* ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான *சந்தாப்*பணம் *அத்தியட்சகர், அரசாங்க* வெளியீட்டலுவலகம், *அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163,* கிருலபனை *மாவத்தை,* பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்